**ஆயர் பிரெட்ரிக் ஹான்சன் அவர்களின் மேய்ப்புப்பணி மடல்**
**ஒஸ்லோ கத்தோலிக்க மறைமாவட்டத்தின் விசுவாசிகளுக்கு,**
**மறைமாவட்டத்தின் பொருளாதார எதிர்காலம் பற்றி**

இயேசு கிறிஸ்து புகழப்படுவாராக! அவரது திருநாமம் என்றென்றும் போற்றப்படுவதாக!

1. நமது ஆண்டவர், தமது வார்த்தைகளைக் கேட்டு, அவற்றின்படி வாழ்வை அமைத்துக்கொள்பவரை "பாறையின் மேல் கட்டப்பட்ட வீட்டிற்கு" ஒப்பிடுகிறார் (மத் 7:24). மழை பெய்யும்போதும் புயல் வீசும்போதும் கலக்கமான காலங்களிலும் உறுதியாக நிற்பது ஒவ்வொரு கிறிஸ்துவ சீடருக்கும் மட்டுமல்ல, நமது மறைமாவட்டத்திற்கும் பங்குகளுக்கும் உரியதாக இருக்க வேண்டும். அதில் பொருளாதார உறுதிப்பாடும் அடங்கும்.

**கணிசமான சவால்கள்: குறையும் வருவாய் மற்றும் அதிகரிக்கும் செலவுகள்**

2. நமது மறைமாவட்டத்தினதும் பங்குகளினதும் பொருளாதார எதிர்காலத்தைப் பற்றி நாம் அனைவரும் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய அவசியம் இருப்பதால் இந்த மேய்ப்புப்பணிக் கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன். ஏனெனில், நாம் பாறையின் மேல் கட்டப்பட்ட வீடு போல, முழுமையாக, பாதுகாப்பான நிலையில் இல்லை.

3. இவ்வாறு நான் கூறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில் மூன்றை மட்டும் குறிப்பிடுகிறேன். முதலாவதாக, நாங்கள் அரசின் பொருளாதார உதவிகளைப் பெரிதும் சார்ந்திருக்கிறோம். மறைமாவட்டத்தின் வருவாயில் 85 சதவீதத்திற்கும் அதிகமான பகுதி அரசின் நிதியுதவியிலிருந்து கிடைக்கிறது. நார்வே அரசாங்கம் எங்களுக்கு நிதியளிப்பது இயல்பானதாகிவிட்டது. ஆனால் இந்நிதியுதவிகளில் மாற்றங்கள் வரக்கூடும் என்பதற்கான பல அறிகுறிகள் உள்ளன. அந்த மாற்றங்கள் எவ்வளவு இருக்கும் அல்லது எப்போது அமலுக்கு வரும் என்பது நமக்குத் தெரியாது. இருப்பினும் அதன் விளைவுகள் நமது மறைமாவட்டத்திற்கும் பங்குகளுக்கும் குறிப்பிடத்தக்கதாக இருக்கலாம்.

4. இரண்டாவதாக, நமது மறைமாவட்டத்தில் சேமித்து வைத்த நிதி மிகக் குறைவு. கடினமான காலங்களில் உதவக்கூடிய "எண்ணெய் நிதி" போன்ற எந்தப் பெரிய சேமிப்பும் நம்மிடம் இல்லை. பெரிய மாற்றமோ நெருக்கடியோ ஏற்பட்டால், நம்மிடம் உள்ள ஒரே வழி, மறைமாவட்ட நடவடிக்கைகளில் கணிசமான குறைப்புகளைச் செய்வதாகும்.

5. மூன்றாவதாக, மறைமாவட்டத்திற்குக் கணிசமான செலவுகள் உள்ளன. அவற்றில் மிகப்பெரிய பகுதி நமது பங்குகள், ஆன்மீகப் பணிகள், மற்றும் திருச்சபைக்குச் சொந்தமான பல சொத்துகளுடன் தொடர்புடையவை. நமது தேவாலயங்கள் தொடர்ந்து, அதிக பராமரிப்பைத் தேவைப்படுகின்றன. மேலும் பெரும்பாலான பங்குகளில் தேவாலயங்களிலும் பங்குமண்டபங்களிலும் இடவசதி குறைவாக உள்ளது. ஆகவே கூடுதல் மற்றும் பெரிய கட்டிடங்களின் தேவை மிகவும் அதிகமாக உள்ளது.

6. இச் சவால்கள் குறித்த விரிவான தகவல்களை எங்கள் இணையதளத்தில் உள்ள காணொளி விளக்கத்திலும், இந்த மேய்ப்புப்பணிக் கடிதத்துடன் வழங்கப்படும் தகவல் தாளிலும் காணலாம்.

**முன்னோக்கிய பாதை**

7. எதிர்காலத்தைப் பற்றி நாம் ஒன்றிணைந்து சிந்திக்க வேண்டிய இன்னொரு காரணம் உள்ளது. பல ஆண்டுகளாக நமது மறைமாவட்டமும் பங்குகளும் வளர்ச்சியடைந்து வருகின்றன. ஏராளமான திருப்பலிகள், ஜெபக் குழுக்கள், உறுதிப்பூசுதலுக்குத் தயாராகும் இளைஞர்கள், மற்றும் கத்தோலிக்க நம்பிக்கையை ஆழமாக அறிய விரும்புவோர் உள்ளனர். செயல்பாடுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இன்னும் அதிக வளர்ச்சியையே நாம் விரும்புகிறோம். மேலும் நற்செய்திப் பணி, குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான அதிக சேவை, அதிகமான, விரிவான, அழகான தேவாலயங்கள், துன்புறுவோருக்கும் தேவையுள்ளோருக்கும் அதிக உதவி, மேலும் பல குருத்துவ அழைப்புகள் மற்றும் குருமட மாணவர்களின் தேவையும் உள்ளன. நமது கத்தோலிக்கச் சமூகத்தின் உள்ளும் வெளியும் வாழும் மக்களுக்கிடையே ஒளிவீசும் உயிருள்ள திருச்சபையை நாம் விரும்புகிறோம்.

8. திருச்சபையாக தொடர்ந்து வளர்ச்சியடைய நாம் அனைவரும் முன்வந்து இப்பணியில் பங்கேற்க வேண்டும். இது நமது ஜெபங்களிலிருந்தே தொடங்குகிறது. ஆகையால் நமது மறை மாவட்டத்திற்காகவும், நமது பங்குகளுக்காகவும், நாம் கண்டு மகிழும் ஆன்மீக உயிர்ப்பிற்காகவும் ஜெபியுங்கள். திருச்சபையின் எதிர்காலம் இறைவனின் கரங்களில் உள்ளது.

9. அதேவேளை நடைமுறை விஷயங்களையும், குறிப்பாக பொருளாதாரத்தையும் நிதி நிர்வாகத்தையும் நாம் மறந்துவிட முடியாது. முதலில், நமது பொருளாதார நிர்வாகம் பாதுகாப்பானதாகவும், நன்கு திட்டமிடப்பட்டதாகவும், யதார்த்தமானதாகவும் இருக்க வேண்டும். நமக்கில்லாத பணத்தை நாம் செலவிட முடியாது. நாம் சேமிக்க வேண்டும்; தொலைநோக்குடன் சிந்திக்க வேண்டும்; திட்டமிட வேண்டும்; திட்டங்களின்படி செயல்பட வேண்டும். இரண்டாவது, நமது செலவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும். எது அவசியம்? எதைத் தள்ளிப்போடலாம்? எதைக் குறைக்கலாம்? மூன்றாவது, திருச்சபைக்கு நன்கொடைகளும் பங்களிப்புகளும் மிகவும் தேவைப்படுகின்றன. வருங்காலங்களில் குறைவான வருவாய் கிடைக்கும் நிலையில், நாம் அனைவரும் அதிகப் பொறுப்பேற்க வேண்டும். தற்போது காணிக்கை மற்றும் நன்கொடைகளாக கிடைக்கும் வருவாய், எதிர்காலப் பாதுகாப்பிற்கு போதுமானதாக இல்லை.

## "பாறையின் மேல் கட்டப்பட்ட வீடு" திட்டம்

10. திருச்சபையின் வளர்ச்சியும் தேவைகளும், தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் பொருளாதார நிலையும் முன்னிட்டு, இன்று "பாறையின் மேல் கட்டப்பட்ட வீடு" என்ற இயக்கம் தொடங்கப்படுகிறது. இந்த இயக்கத்திற்கு இரண்டு நோக்கங்கள் உள்ளன.

11. முதலாவது, நம்மில் ஒவ்வொருவரும் திருச்சபையின் வாழ்வில் ஆவிக்குரிய, நடைமுறை மற்றும் பொருளாதார ரீதியாக, எவ்வாறு பங்களிக்கிறோம் என்பதை ஆழமாக ஆராய்வதாகும். எளிமையாகச் சொல்வதானால், "திருச்சபையின் தொடர்ந்த வளர்ச்சியில் எனது பங்கு என்ன?" என்று ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்டுக்கொள்ள வேண்டும். நாம் அனைவரும் ஒரே பணியைச் செய்ய முடியாது; அனைவருக்கும் ஒரே திறமைகளும் வாய்ப்புகளும் இல்லை. இருப்பினும் ஒவ்வொருவரும் பங்காற்ற அழைக்கப்படுகிறோம். மேலும், "திருச்சபையின் வளர்ச்சிக்காக நான் என்ன வழங்க முடியும்?" என்று சிந்திக்க வேண்டும். இப்படிப்பட்ட ஆதரவு, பங்கிற்கான ஞாயிறு காணிக்கையாகவோ, குறிப்பிட்ட திட்டங்களுக்கான நன்கொடையாகவோ, மறைமாவட்டத்திற்கும் பங்குகளுக்கும் வழங்கப்படும் நிலையான பங்களிப்புகளாகவோ இருக்கலாம். சிறியதாக இருந்தாலும் விசுவாசத்துடனும் தொடர்ச்சியாகவும் வழங்கப்படும் நன்கொடைகள், திருச்சபை பாதுகாப்பாகத் திட்டமிட்டு வளர, உதவுகின்றன.

12. மேலும், தூய யோசேப்பு கட்டிட நிதிக்காக நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு சிறப்பு நன்கொடையை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இது தேவாலயக் கட்டிடங்களின் கட்டுமானம், கொள்முதல், பராமரிப்பு மற்றும் விரிவாக்கத்திற்கான மறைமாவட்டத்தின் பொது நிதியாகும். இந்த ஞாயிற்றுக்கிழமையின் முழுக் காணிக்கையும் இந்நிதிக்குச் செலுத்தப்படும். நேரடி நன்கொடைகள் Vipps 42921 என்ற எண்ணிற்கு அனுப்பலாம். நன்கொடைகள் வழங்கும் முறைகள் தொடர்பான கூடுதல் விவரங்கள் சிற்றேடு மற்றும் தகவல் தாளில் வழங்கப்பட்டுள்ளன.

13. சேகரிக்கப்படும் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு, அந்த நன்கொடைகள் வந்த பங்கிற்கே திருப்பி வழங்கப்படும். அவை அங்குள்ள குறிப்பிட்ட திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு, பங்குகள் தனியாக மேற்கொள்ள இயலாத எதிர்காலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும்.

[இங்கு, குருக்கள், தங்கள் பங்கில் நடைபெறும் ஒரு குறிப்பிட்ட திட்டத்தை அறிமுகப்படுத்துவார்கள்.]

14. www.katolsk.no இணையதளத்தில் இந்த நிதி திரட்டலின் முன்னேற்றத்தைப் பின்தொடரலாம். திருச்சபையின் வளர்ச்சிக்காக நீங்கள் வழங்கும் அனைத்து பங்களிப்புகளுக்கும் நன்றி. நாம் ஒன்றிணைந்து, படிப்படியாக, நமது மறைமாவட்டத்தையும் பங்குகளையும் பாறையின் மேல் உறுதியாகக் கட்டி எழுப்புவோமாக. இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. புனித ஒலாவின் வல்லமையுள்ள பரிந்துரை உங்களுக்கு என்றும் துணையாக இருப்பதாக.

ஒஸ்லோ புனித ஒலாவ் பேராலயத்தில் வழங்கப்பட்டது.
பொதுக்காலம் - 29ஆம் ஞாயிறு - 18 அக்டோபர் 2026



+பிரெட்ரிக் ஹான்சன்
ஒஸ்லோ ஆயர்